# கோயில் சிற்பக் கலையில் யோக நிலைகள்

லெ. சிவதீபா[1] & முனைவர் கோ. ப. நல்லசிவம்[2]
[1]முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]துறைத் தலைவர்,
மெய்யியல் துறை, தஞ்சாவூர்- 613010,
thiyanasugi@gmail.com & gpnsivam@gmail.com.

6

**ஆய்வுச் சுருக்கம்**

கோயில் கோ + இல் = கோயில். கோ என்பது இறைவனையும் இல் என்பது இல்லத்தையும் விளக்குகிறது. மேலும் கோயில் என்பதற்கு மனித உடல் மற்றும் மன்னர் வசிக்கின்ற அரண்மனை என்றும் விளக்கப்படுகிறது. இறைவன் உறைகின்ற இடத்திற்குத் திருக்கோயில் என்றும் ஆலயம் என்றும் கூறப்படுகிறது. ஆ + லயம் = ஆலயம். ஆ என்பது ஆன்மா அல்லது உயிர்களையும், லயம் என்பது லயித்தல், ஒன்றுபடுதல், ஒருமைப்படுத்தல் என்றும் விளக்கப்படுகிறது. ஆலயம் என்பதற்கு ஆன்மாக்கள் இறைவனோடு ஒன்றி இணையும் இடம் என்றும் பொருள் படுகிறது. அதாவது பசுவின் உடல் முழுவதும் பால் உற்பத்தியானாலும் அதன் மடியில் தேங்கி கன்றுக்கு ஈவதுபோல, அண்ட சராசரம் எல்லாம் நிறைந்திருக்கும் இறைவனைத் திருக்கோயில்களில் எழுந்து அருளச் செய்து மனித குலத்தை இறையருளைப் பெறச் செய்து இருக்கின்றனர். இச்சிறப்பு வாய்ந்த கோயில் சார்ந்த மெய்யியலின் விளக்கத்தையும், கோயில்கள் மனித உடலோடு எவ்வாறு தொடர்புடையது என்பதையும், இக்கட்டுரை விளக்குவதாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

கோயில், மெய்யியல், சிற்பக்கலை, யோக நிலை, இறையாற்றல், நுண்கலைகள்.

**முன்னுரை**

தொன்மையான கால வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில் கட்டிடக்கலையில், உலக நாடுகளுக்கு எல்லாம் பண்பாட்டைக் கூறும் நம்முடைய பண்பாட்டுச் சின்னமாக விளங்கும் தூண்கள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகிய நுண்கலைகள் வாயிலாக மெய்யியல் விளக்கப்படுகிறது. அறிவியல் உண்மையைக் காணும் முயற்சியில் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டே வருகிறது, எனினும் எத்துறையிலும் முடிந்த முடிவாக எந்த முடிவையும் கண்டறிய முடியவில்லை. உண்மையைக் காணும் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வருகிற நிலையில், கோயில் சார்ந்த மெய்யியல் நம் முன்னோர்களின் தனித்தன்மையை எடுத்துரைக்கும் காலக் கண்ணாடியாக இருக்கிறது.

வாணிபம், பொருளாதாரம், கலை, பண்பாடு, மருத்துவம், வானியல் என தனி தடம் பதித்த நம் முன்னோர்கள் இயற்கையின் இயல்பையும், இயக்கத்தையும் கணித்து ஆராய்ந்து அவற்றில் ஏற்படும் மாற்றத்தையும், வானில் காணப்படும் கோள்கள், விண்மீன்களின் தோற்றம், சுழற்சி, காலச் சுழற்சியால் புவியில் ஏற்படும் அறுவகைப் பருவ நிலைகளையும், பஞ்சபூதங்களுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்புகளையும், பருவநிலை மாற்றங்களால் உயிர்களில் வரும் இன்ப, துன்ப

உணர்ச்சிகளையும், வளர்ச்சி மற்றும் மறைவு ஆகியனவற்றையும், இயற்கை தோன்றிய காலம் முதல் தற்காலம்வரை மனித நாகரிகத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப்படி நிலையிலும் உள்ள அனைத்தையும் பதிவு செய்யப்பட்ட இடமே கோயில்.

- கோயில் சார்ந்த மெய்யியல்
- யோக தரிசனம்
- கோயிலின் சிறப்பு
- மனித உடல் அமைப்பும் கோயில் அமைப்பும்
- கோயில்களில் நுண்கலைகள்

**கோயில் சார்ந்த மெய்யியல்**

இந்திய நாட்டு ஆய்வுகளானது அகம், புறம் என இரண்டையும் கூர்ந்துணர்ந்து நடைபெறுவதாகும். இவ்வகையில் ஆதி மனிதன் உயிர் வாழ உணவை உற்பத்தி செய்ய துவங்கிய காலத்தில், பஞ்சபூதங்களின் உதவியுடன் நாம் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறோம், அந்த உணவை உண்டு உயிர் வாழ்கிறோம் என்றுணர்ந்து அவற்றை வழிபடத் தொடங்கினர். பின் அவற்றுக்கும் தனக்குமானத் தொடர்புகளை அகநோக்காக அறிந்து அவ்வுண்மைகளை மனித குலத்திற்குப் போதித்தும், நூல்களாகவும், கோயில் கட்டிடக்கலை மூலமாகவும் பதிவு செய்துள்ளனர். அவைகள் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நான்கு வேதங்களும் இறைவனைப் பற்றியும், இறைவனை வழிபடும் முறைகளையும், இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகளையும் பிரக்ஞானம் பிரம்மம், அகம் பிரம்மாஸ்மி, தத்துவமசி, அயம்மாத்தும் பிரம்மம் என்று நான்கு மகா வாக்கியங்களாகச்[2] சுருக்கியும் கூறுகிறது. இந்நான்கு வேதங்களும் பிற்காலங்களில் புராணங்களாகவும், ஆகமங்களாகவும், உபவேதங்களாகவும், ஆஸ்திக, நாஸ்திக தரிசனங்களாகவும், வேதாந்தங்களாகவும், இதிகாசங்களாகவும், தர்மசாஸ்திரங்களாகவும் விளக்கப்படுகின்றன. இவற்றுள் ஒன்றான யோக தரிசனம் கோயில் சார்ந்த மெய்யிலோடு மிகவும் ஒன்றுபடுகிறது. தரிசனங்களில் ஒன்றான வைசேஷிக்கா கூறும் அணுவை நினைத்து அணுவிற்கு உந்து சக்தியாக இருப்பதையும் கண்டறிய சிந்தித்து, சிந்தித்து அப்பொருளாகவே மாற்றம் பெற்று, பிரபஞ்சத்தையும் உயிர்களையும் படைத்து ஓர் சீரான இயக்கத்தை நடத்தி வரும் பேராற்றல் இருக்கிறது என்பதை நம் முன்னோர்கள் உணர்ந்தனர். அந்தச் சிறந்த அனுபவத்தைப் பெறுவதே மனித வாழ்வின் நோக்கம் என்று உணர்ந்த சித்தர்கள், அதனை அனைத்து மனிதர்களும் அறிவதற்காக வகுத்த ஒரு வாழ்வியல் முறையே யோக தரிசனம் ஆகும். இதனைப் பதஞ்சலி மகரிஷி

**'பரமாணு பரம மஹத் த்வாந்தோ அஸ்ய வசீகார'[3]**

அணுவின் அளவிற்குக் கூர்ந்து தியானம் இயற்றுபவர் மனதிற்கு அணுவானது தன்னைப் பற்றிய எல்லா உண்மைகளையும் அறிவிக்கிறது. யோகத்தின் அடிப்படை மனதை ஒருமுகப்படுத்துவதாகும். ஒருமுகப்படுத்திய மனம் ஆற்றல் மிக்கது. அது பிரபஞ்சத்தையும் கடந்து நின்று அனைத்தையும் அறியக்கூடியதாக இருக்கிறது. இவ்வாற்றல் மிக்க மனம் அணு முதல் அண்டம் வரை அனைத்தையும் வசப்படச் செய்கிறது. யோகிகள் அந்த மனதை வசப்படுத்துகிறார்கள்.

இந்

த மனதைக் கொண்டே இந்த பிரபஞ்ச ரகசியங்கள் எல்லாம் அறிந்து அதனைக் கோயில் சார்ந்த மெய்யியலாக மாற்றி உள்ளனர்.

**யோக தரிசனம்**

இந்திய மெய்யியலின் ஓர் அங்கமான யோக தரிசனத்தில் எட்டு விதமான யோகங்கள் இரண்டு நிலைகளில் விளக்கப்படுகின்றன. ஒன்று மனதையும், உடலையும் ஊக்குவித்து உறுதிப்படுத்தும் பகிரங்க யோகம், மற்றொன்று மனதை ஒரு முனை படுத்தி, ஆன்மாவையும் அதன் மூலப் பொருளையும் உணரச் செய்யும் அந்தரங்க யோகம், என இரு வாழ்வியல் முறைகளை பதஞ்சலி மகரிஷி

**'யம நியமாஸன ப்ரணாயாம ப்ரத்யாஹார தாரணா த்யான ஸமாதயோ அக்ஷ்டாவங்கானி'[4]**

- இயமம் - தனிமனித ஒழுக்கங்கள்
- நியமம் - சமுதாய ஒழுக்கம்.
- ஆசனம் - உடலை லேசாக உணர்வது.
- பிரணாயாமம் - காற்றை உடலுக்குள் சீராக இயங்கச் செய்வது
- பிரத்தியாகாரம் - புலன்களை அமைதியாக வைத்திருப்பது.
- தாரணை - மனதை உள்முகமாகத் திருப்புதல்.
- தியானம் - ஒன்றையே ஆழ்ந்து எண்ணுதல்
- சமாதி - எண்ணமற்ற, மனம் கரைந்த மௌன நிலை.

அந்தரங்க யோகம் என்ற தாரணை, தியானம், சமாதி ஆகியன

**"எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலி றைஞ்சி"[5]**

**"நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"[6]**

**"தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்"[7]**

என்ற மாணிக்கவாசகரின் சிவபுராணப் பாடல் வரிகளுக்கு ஏற்ப, இறையாற்றல் எண்ணங்களுக்கு எட்டாத நுண்ணுணர்வாகவும், ஒளிச்சுடராகவும் இருக்கும் இறையாற்றலை அடையச் செய்கிறது.

**கோயிலின் சிறப்பு**

இயற்கை ஆற்றலைக் கண்டு வியந்த மனிதன் அதற்கு நன்றி செலுத்த, மரத்தடி மற்றும் நதிக்கரைகளில், ஓர் இடத்தை அமைத்துக் சூரியனின் தோற்றம் மறைவு, பருவநிலை துவக்கங்கள் மற்றும் முடிவுகள் என்ற காலங்களின் அடிப்படையில் வழிபடத் தொடங்கினான், நாளடைவில் இயற்கை ஆற்றலை ஒரு குறியீடாக அல்லது உருவமாக பாவித்தும் வழிபட்டு வந்துள்ளனர். பின்பு மன்னராட்சி காலங்கள் பல்வேறு சமுதாய நோக்குடனும் கலைத்திறன்களையும் அறிவின் நுட்ப திறன்களையும் வெளிப்படுத்தும் விதமாகக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கிறன. கோயில் அமைப்பில் மிக முக்கியமானது தலம், மூர்த்தி, தீர்த்தம், விருட்சம், என்பனவாகும்.

**தலம்**

அண்ட சராசரம் எல்லாம் நிறைந்துள்ள இறையாற்றலையும், வான்கோள்களின் ஆற்றல்களையும், பஞ்சபூதங்களின் ஆற்றல்களையும் குறிப்பிட்ட இடத்தில் பரவிடச் செய்வது.

**மூர்த்தி**

**"கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை"[8]**

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறையாற்றல் எண்குணங்களை உடையது. அந்தக் குணங்களை சிலை உருவங்களில் நிற்றல், அமர்தல், கிடத்தல் என்ற யோகநிலைகளில் வெளிப்படச் செய்து மூர்த்தியாக வழிபடுவது ஆகும்.

**தீர்த்தம்**

தலத்தில் உள்ள இறையாற்றலைத் தீர்த்தம் கிரகித்துவைத்திருக்கும். அந்தத் தீர்த்தத்தை வணங்கி நீராடுபவர்களுக்கு, உடலிலும், மனதிலும் குறிப்பிட்ட அதிர்வை ஏற்படுத்தி மனதில் அமைதியும், உடலில் ஆரோக்கியத்தையும் பெறச் செய்வது தீர்த்தம்.

**விருட்சம்**

தலத்தோடு தொடர்புடைய அதிர்வலைகளையும் பிரபஞ்ச சக்தியையும் கிரகித்து வெளிப்படுத்துவது தலவிருட்சம்.

**மனித உடல் அமைப்பும் கோயில் அமைப்பும்**

யோக தரிசனத்தில் அந்தரங்க யோகத்தின் வாயிலாக மனித உடலையும் அதன் ரகசியங்களையும் அறிந்த நம் முன்னோர்கள், மனித உடல் கோயில் என்பதை விளக்கும் வகையில் கோயில்களை அமைத்துள்ளனர். இதில் முதன்மையாக விளங்குவது சிதம்பரம் நடராஜர் கோயில். மனித உடலை ஆலயம் எனக் கோயில்களின் சிறப்பைத் திருமூலர்

**'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே'[9]**

**'படமாடக்கோயிற் பகவற்கு ஒன்று நீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர் கொன் றீயில்**
**படமாடக் கோயிற் பகவற்க தாமே'[10]**

நடமாடும் கோயிலான மனிதருக்குச் செய்யும் ஒரு செயலானது படமாடும் கோயில் ஆன இறைவனைச் சென்றடையும் என்றும், மேலும் மனிதனை நடமாடும் அறிவுத் திருக்கோயில்களாக வேதாத்திரி மகரிஷி விளக்குகிறார்.

**"அறிவே தான் தெய்வம் என்றார் தாயுமானார்**
**அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக்காட்டி**

**அறிவதனை அறிவித்தார் திருவள்ளுவர்**

**அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்**

**அறிஞர் திருமூலர் அவ்வறிவில் ஆழ்ந்து**

**ஆனந்தக் கவியாத்தார் ராமலிங்கர்**

**அறிவில் அறிவாய் நிலைத்து அறம்வகுத்தோர்**

**அதை வாழ்ந்து காட்டினோர்நினைவு கூர்வாம்“[11]**


**சிதம்பரம் நடராஜர் கோயில்**

“மனித உடலானது அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து சுற்றுகளைக் கொண்டது. அதேபோல சிதம்பரம் நடராஜர் கோயிலிலும் ஐந்து திருச்சுற்றுக்கள் என்னும் பிரகாரங்கள் அமைக்கப்பட்டு மனிதருக்கு இதயம் இடப்புறம் அமைந்திருப்பதைப் போல மூலவர் இருக்கும் கருவறைக் கோயிலின் நடுப்புள்ளியில் இல்லாமல் இடப் புறமாகச் சற்று நகர்த்தி கருவறை அமைக்கப்பட்டுள்ளது. மனிதனுக்கு ஒரு நாளைக்கு 21,600 முறை நுரையீரல் இயக்கத்தால் மூச்சு நடைபெறுகிறது. அதுபோல கோயிலின் இதயமான கருவறையின், மேல் உள்ள கூரை 21,600 ஓடுகளால் வேயப்பட்டுள்ளது. மனிதனுக்குள் 72,000 நாடிகள் ஓடுகின்றன அதேபோல அக்கூரையில் 72,000 ஆணிகள் பதிக்கப்பட்டுள்ளது. இதயத்தின் துடிப்பே நடராஜரின் நடனமாக உருவகப்படுத்தப்பட்டு இருக்கிறது“[12] (இதனை தற்காலத்தில் விஞ்ஞானிகள் அனைவரும் ஒவ்வொரு அணுவும் நடனமாடிக் கொண்டிருக்கிறது என்று விளக்கியுள்ளார்கள்). இச்சிறப்புகள் பெற்ற இக்கோயிலில்தான் பதஞ்சலி முனிவர் யோகத்தின் நூலாகிய பதஞ்சலி யோக சூத்திரத்தை இயற்றியுள்ளார்.

**கோயில்களில் நுண்கலைகள்**

**கட்டிடக்கலை, சிற்பக்கலை (இசைத்தூண்கள்), ஓவியக்கலை, இசைக்கலை“[13], நடனக் கலை, கூத்துக் கலை.**

பிரபஞ்ச ஆற்றலை முறையாகக் கட்டுப்படுத்த ஆகம விதிகளைக் கொண்டு, இயற்கைச் சீற்றத்தால் அழிவு ஏற்படாமலும், காலத்திற்கும் நிலைத்திருக்கும் வகையிலும் அமைக்கப்பட்டது கோயில் கட்டிடக்கலை. பல்வேறு வகையான கலைத்திறன் கொண்ட சிற்பங்களும், இசையை வெளிப்படுத்தும் இசைத் தூண்களும், இறைத்தன்மையையும் யோக நிலைகளையும் வெளிப்படுத்தும் நடனக்கலையும் சிற்பங்களில் காணப்படுகின்றன. பிரணாயாமத்தின் பயன் தரும் இசைக்கலையும், அந்தந்தக் காலத்தின் வாழ்வியலையும் இயற்கை வளத்தையும் வெளிப்படுத்தும் ஓவியக்கலையும், மற்றும் மக்களுக்கு அறக் கருத்துக்களையும், வாழ்வியல் பழக்க வழக்கங்களையும், கூத்துக் கலையின் மூலமாக கற்பிக்கப்பட்டுள்ளன. இந்த நுண்கலைகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு கோயில் சார்ந்த மெய்யியலால் காலந்தோறும் தொன்று தொட்டு வளர்ந்து வருகின்றன. சிற்பக் கலையில் மெய்யியலின் யோகக் கலை காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அவற்றுள் கீழ்வரும் கோயில்களில் யோக நிலைகள் சான்றுகளாக காணப்படுகிறது.



**மாமல்லபுரத்துச் சிற்பக் கலையில் யோகநிலை**

சிற்பக்கலைக்குப் பெயர் பெற்ற மாமல்லபுரத்துச் சிற்பக் கலையில் அர்ஜுனன் ஒரு காலை உயர்த்தி ஏகபாத ஆசன
நிலையில் தவம் புரிந்து சிவபெருமானிடம் பாசுபதச் சக்கரம் பெறுதல் காணப்படுகிறது.

**கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயில்**

கலைக்குச் சிறந்த பழமையான கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலில் உள்ள சிற்பக்கலையில் அர்த்த மச்சேந்திராசனம், சுகாசனம், குய்யபாதாசனம் காணப்படுகிறது.







படம் 1.அர்த்த மச்சேந்திராசனம், படம் 2. சுகாசனம்

படம் 3.குய்யபாத ஆசனம்



**திருப்புல்லாணி ஆதி ஜெகநாதப் பெருமாள் கோயில்**

கி.பி.எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருப்புல்லாணி ஆதி ஜெகநாதப் பெருமாள் கோயிலில் வலதுகாலைத் தூக்கி தவம் செய்யும் சிற்பம் காணப்படுகிறது.

**தஞ்சை பெருவுடையார் கோயில்**

தமிழர் கட்டிடக்கலைக்குச் சான்றாக விளங்கும் அற்புதமான கட்டிடக்கலையைக் கொண்ட 10-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலில் பத்மாசனம்ஙள, மலாசனம், அர்த்த பத்மாசனச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.






படம் 1. பத்மாசனம் படம் 2. மலாசனம்

படம் 3. அர்த்த பத்மாசனம்

**திருப்பராய்த்துறை தாருகாவனேஸ்வரர் கோயில்**

திருப்பராய்த்துறை தாருகாவனேஸ்வரர் கோயிலில் சுகாசனம், சித்தாசனம், தாடாசனம், வீராசனம், சக்கராசனம், யோகியர்நடனம் ஆகியன சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.


படம் 1.சுகாசனம் படம் 2. சித்தாசனம் படம் 3.தாடாசனம்






படம் 4. வீராசனம் படம் 5. யோகியர்நடனம் படம் 6. சக்கராசனம்

**ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில்**

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் சித்தாசனம், ஏகபாத ஆசனம், அர்த்த மச்சேந்திராசனம், மலாசனம், யோக நித்ரா ஆகியன காணப்படுகின்றன.



படம் 1. அர்த்த பத்மாசனம் படம் 2. ஏகபாத ஆசனம் படம் 3.அர்த்தமச்சேந்திராசனம் படம் 4. யோக நித்ரா





படம் 5. ஏகபாத ஆசனம் படம் 6. ஏகபாத ஆசனம் படம் 7.மலாசனம், பர்வதாசனம்

**திருவானைக்கோயில்**

திருவானைக்கோயிலில் ஏகபாதாசனத்தில் சக்தியிடம் வரம் பெறுதலையும், ஏகபாதாசனமும், யோகியர்நடனம், இடுப்புக்கு மேல் பாதி மனித உருவிலும் இடுப்புக்குக் கீழ் மயூர நிலையில் உள்ள சிற்பத்தின் வாயிலாக, யோகாசனங்கள் பிற உயிர்களில் இருந்து வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதற்குச் சான்றாக விளங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.







படம்1.ஏகபாதாசனம், படம் 2. ஏகபாதாசனம் படம்3.யோகியர்நடனம் படம் 4.மயூராசனம் படம் 5 அர்த்தப் பத்மாசனம்

**நிறைவுரை**

தன்னை அறிதலில் துவங்கி ஆன்ம விடுதலைப் பெற வழி காட்டும் கோயில் கலையையும், மனித உடல் அமைப்பைக் கொண்டு கட்டப்பட்டுள்ள கோயில் கட்டிடக்கலைச் சிறப்பையும், மனித அறிவே அவனின் அகம், புறம் சார்ந்த வாழ்வியலை அறிய உதவும் கருவி எனவும், அக்கருவியைக் கொண்டே அணு முதல் அண்டம் வரை அனைத்தையும் தன் வயப்படுத்திக் காலம் தோறும் நம் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பதிவிடப்பட்ட கோயில் சார்ந்த மெய்யியல் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. கோயில் சிற்பக் கலையில் உள்ள நுண்கலைகளின் வாயிலாக யோக தரிசனத்தின் மேன்மையை நாம் உணர்ந்து கொள்ளச் சான்றாக விளங்குகிறது.

**மேற்கோள்கள்**

1. இந்திய தத்துவஞானம் ப- 32
2. மேலது ப - 2.
3. பதஞ்சலி யோக சூத்திரம், சமாதி பாதம், சூத்திரம் 40, ப - 67
4. மேலது பக்கம், சாதன பாதம் சூத்திரம் 29, ப -145.
5. திருவாசகம் பாடல் வரி 22
6. மேலது பாடல் வரி 76
7. மேலது பாடல் வரி 80
8. திருக்குறள் - 9
9. திருமந்திரம் பா – 1823
10. திருமந்திரம் பா – 1857
11. ஞானமும் வாழ்வும், பா- 7
12. https://aarkaytamil.blogspot.com/2014/12/blog-post_95.html
13. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் ப - 7

**துணைநூற் பட்டியல்**

1. லக்ஷ்மணன். கி, இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, முதல் பதிப்பு 1960.
2. ஆச்சார்யா பி . எஸ், நர்மதா பதிப்பகம், சென்னை.
3. திருவாசகம், ஸ்ரீஇராமகிருஷ்ண தபோவனம் திருச்சிராப்பள்ளி, பதினைந்தாம் பதிப்பு 2009.
4. இளங்குமரனார், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்2, வர்த்தமானர் பதிப்பகம்

சென்னை, இரண்டாம் பதிப்பு 1999.

5. திருமூலர்அருளிய திருமந்திரம் பிரேமாபிரசுரம், சென்னை, முதற்பதிப்பு 2009.
6. வேதாத்திரி மகரிஷி, ஞானமும் வாழ்வும், வேதாத்திரி பதிப்பகம் ஈரோடு, முதல் பதிப்பு 1964.
7. https://aarkaytamil.blogspot.com/2014/12/blog-post_95.html
8. சீனி. வேங்கடசாமி, தமிழர்வளர்த்த அழகுக் கலைகள், முல்லை நிலையம் சென்னை. முதற்பதிப்பு 2013.